# மார்ச் – 19 – செவ்வாய்

**உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன்: திபா. 89:2**

## முதல் வாசகம் : 2 சாமுவேல் 7 : 4 – 5, 12 – 14, 16

அன்று இரவே ஆண்டவரின் வார்த்தை நாத்தானுக்கு அருளப்பட்டது.நீ சென்று, என் ஊழியன் தாவீதிடம் ஆண்டவர் இவ்வாறு கூறுவதாகச் சொல் நான் தங்குவதற்காக எனக்கு ஒரு கோவில் கட்டப்போகிறாயா? உன் வாழ் நாள் நிறைவுபெற்று நீ உன் மூதாதையரோடு துயில்கொள்ளும் போது, உனக்கு பிறக்கும் உன் வழித்தோன்றலை உனக்குப் பின் நான் உயர்த்தி அவனது அரசை நான் நிலைநாட்டுவேன்.எனது பெயருக்காக கோவில் கட்டவிருப்பவன் அவனே. அவனது அரசை நான் என்றும் நிலைநிறுத்துவேன்.நான் அவனுக்கு தந்தையாக இருப்பேன். அவன் எனக்கு மகனாக இருப்பான். அவன் தவறு செய்யும போது மனித இயல்புக்கேற்ப அடித்து, மனிதருக்கே உரிய துன்பங்களைத் தருவேன். என் முன்பாக உனது குடும்பமும் உனது அரசும் என்றும் உறுதியாயிருக்கும்! உனது அரியணை என்றுமே நிலைத்திருக்கும்!

**பதில்பாடல்:**ஆண்டவரது வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும்

## நற்செய்தி : மத்தேயு 1 : 16, 18 – 21, 24

(வாசகம் வேறுபடலாம் லூக்கா 2 : 41 - 51)

யாக்கோபின் மகன் மரியாவின் கணவர் யோசேப்பு. மரியாவிடம் பிறந்தவரே கிறிஸ்து என்னும் இயேசு. இயேசு கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடிவாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரியவந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். அவர் கணவர் யோசேப்பு நேர்மையாளர். அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். அவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி, ”யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப்பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்” என்றார். யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணித்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார்.

**தியானம்:** இன்று புனித சூசையப்பரின் திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இயேசுவின் வளர்ப்புத் தந்தையாக யோசேப்பு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டார். கடவுளுடைய திட்டம் நிறைவேற யோசேப்பு ஒத்துழைத்தார். அதுவே அவருடைய வாழ்க்கையைச் சிறப்படையச் செய்தது. யோசேப்பின் நேர்மை எவ்வாறு இங்கு வெளிப்படுகின்றது என்றால் யோசேப்பு மரியாவின் கணவர் என்னும் முறையிலும் இயேசுவின் வளர்ப்புத் தந்தை என்னும் முறையிலும் அவர்களைப் பேணிப் பராமரித்தார் என்பதல் ஐயமில்லை. யோசேப்பு மரியாவை திருமணம் செய்துகொண்டு கூடி வாழ்வதற்கு முன்னரே மரியா கருவுறுகின்றார். இச்செய்தியை அறிந்த யோசேப்பு அதிர்ச்சியடைந்தார் என்றாலும் மரியாவை இகழ்ச்சிக்கு உட்படுத்துவது முறையல்ல என அவர் முடிவு செய்து மறைவாக விலக்கிவிட திட்டமிட்டபோது அவருக்கு உண்மை தெரியவருகின்றது. மரியா கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான் என்னும் செய்தி அவருக்குக் கடவுளிடமிருந்து கனவின் வழியாக வருகின்றது. இதை யோசேப்பு எவ்விதத் தயக்கமுமின்றி ஏற்றுக்கொள்கின்றார். இங்கு நாம் யோசேப்பின் நேர்மையை காணக்கூடியதாக உள்ளது. ஒருவர் நேர்மையாளர் என்று சொல்வதற்கான அடையாளங்களுள் ஒன்று பிறரைப் பற்றி அவர் கொண்டிருக்கின்ற நல்லெண்ணம். சூசையப்பரும் மரியாவின் மீது நல்லெண்ணம் கொண்டு அவரை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பவில்லை. பிறர் மீது அவர் கொண்ட நல்லெண்ணம் பரிவு அவரது நேர்மையின் ஓர் அடையாளமாகும் ஆமென்.